1975 அக்டோபர் 28]

குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வந்திருக்கிறார்கள். காரணம், அறுவை சிகிச்சையில் மக்களுக்குப் பிடிப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதை மாற்றி, அதற்குப் பதிலாக 'கான்ட்ராசெப்டிவ் பில்ஸ்' கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை மாநகரில் நடைபெற்ற இந்த அறுவை சிகிச்சை முகாமைப் பற்றி எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதக் குறைபாடு இருப்பதாகவும் மக்கள் குறிப்பிட இடமில்லை. எங்காவது ஒன்றிரண்டு தவறுகள் நடக்குமானால்—10,000 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதில் ஒன்றிரண்டு தவறுகள் நடக்குமானால் அதற்கான காரணம் என்ன என்பது பற்றி ஆராயப்படுகிறது. இது மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு திட்டம்.

இந்த அறுவை சிகிச்சை நடத்தும்போது ஒரு ஆணுக்கு மத்திய அரசு எல்லா வகையிலும் சேர்த்து அளிக்கும் உதவிப் பணம் 35 ரூபாய். நாம் அதை 80 ரூபாயாக, அவர்கள் கொடுப்பதோடு மாநில அரசு நிதியிலிருந்து 45 ரூபாய் கூடுதலாகச் சேர்த்துக் கொடுக்கிறோம். அதைப்போல தாய்மார்களுக்கு 'டியூபக்டமி' அறுவை சிகிச்சை நடத்தும்போது மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகை ஒருவருக்கு 70 ரூபாய்தான். அந்த 70 ரூபாயுடன் மாநில அரசு நிதியிலிருந்து 40 ரூபாய் கூடுதலாகச் சேர்த்து, 110 ரூபாயாக நாம் கொடுக்கிறோம்.

சென்னை மாநகரில் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்கு ரோட்டரி கிளப், கில்டு ஆஃப் சர்வீஸ் மூலம் உதவி பெற்றிருக்கிறார்கள். இந்த இயக்கத்தை நடத்த ரோட்டரி சங்கம் 65,000 ரூபாய் நன்கொடையாக வழங்கியிருக்கிறது. அதைக்கொண்டுதான் மாநகராட்சி இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது.

*92 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியால் அண்மையில் நடத்தப்பெற்ற குடும்பக் கட்டுப்பாடு முகாமில் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் மொத்தம் எத்தனை பேர்?

(இ) இதில் முஸ்லீம்கள், கிருத்தவர்கள், முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆறாயிரத்து எண்பது பேர்.

(இ) ஆண்களுக்கானக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் புள்ளிவிவரங்கள் சமய வாரியாக வருமாறு :—

இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள்	5,340
இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவர்கள்	316
கிருத்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்	424
மொத்தம்	6,080

Drugs Stores

* 93 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to require Drugs Stores being kept open during nights also; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் இரவு-பகல் எந்நேரமும் மருந்து விற்பனையையும் மருந்தாக்குதல் பணியையும் செய்து வந்த சில மருந்துக் கடைகள் இந்திய அரசு பிறப்பித்த 1970 ஆம் ஆண்டு மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையின் மூலம் அனுமதித்த குறைந்தளவு ஆதாயத் தொகை காரணமாக அப்பணியை நிறுத்திவிட்டன. கூடுதல் பணியாளர்களை நியமிப்பதன் மூலம் இரவு நேரத்தில் மருந்து விற்பனை செய்வதற்காக மருந்தாக்கு நர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பது குறித்து இந்திய மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி ஆய்வு செய்தார். எனினும், அது கைவிடப்பட்டது. முறைமாற்றுப் பணியில் மருந்தாக்குநர்களை நியமிப்பதன் மூலம் ஆதாயம் உள்ள முறையில் இப்பணியை நடத்த இயலும் வகையில், இரவு நேரத்தில் மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் மருந்துக் கடைகளுக்கு, கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மருந்துப்